கையின் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்பதையும் நிரூபித்திருக்கிறோம். ஆகவே அதை மறுக்க முடியாது. எங்களைக் கண்காணிக்கின்ற, இந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்கின்ற, இந்த அவையினுடைய கௌரவத்தைப் பாதிக்கின்ற, இந்த அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் சுதந்திரமாக, அச்சமற்ற முறையில் தங்களுடைய கடமையைச் செய்ய முடியாத சூழ்நிலையை உருவாக்கிய உரிமை மீறல் ஆகிய ஜனநாயகப் பாராளுமன்ற உரிமை மீறல் செயல் இது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. தலைவர் அவர்களே, இந்தச் சுற்றறிக்கையை யார் வெளியிட்டார்களோ, அவர்களை, இந்த அவைக்கு அழைத்து அவர்களுடைய விளக்கத்தைக் கேட்ட பிறகு, மீண்டும் அவையினுடைய எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு, அவை முன்னவர் அவர்களுடைய கருத்தையும் தெரிந்துகொண்டு தீர்ப்பு கூறுவதன் மூலம் உலக நாடுகளில் இந்த ஜனநாயக-பாராளுமன்ற உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டு இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்ப அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதன்மீது அரசாங்கத்தின் கருத்தை அறிந்து மீண்டும் ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: தாங்கள் தீர்ப்பு சொல்கிறீர்களா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தீர்ப்பு என்பதல்ல. பிறகு ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் சொல்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(1) இராமேசுவரம் தீவு அருகில் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, ராமேசுவரம் தீவு அருகில் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 76-77 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ராமேசுவரம் தீவு அருகில் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து

[1981 பிப்ரவரி 26

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே ஒன்று தெளிவாகத் தெரிகிறது. 1978 ஆம் ஆண்டிலே முடிவடைந்திருக்க வேண்டிய இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த பணி இன்னும் முடிவடையாமல் காலதாமதம் ஆகிறது. இதிலே சில சந்தேகங்கள். இந்த பாம்பன் சாலைப் பாலம் கட்டும் வேலைத் திட்டத்திற்கு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் நம்முடைய துறை விதிகளின்படி ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப் பொருள்களின் மீது இன்ஷூரன்ஸ் செய்திருக்க வேண்டும். ஆனால் இன்ஷூரன்ஸ் செய்யாமல் இந்த வேலையை அவர்கள் தொடங்கியதாகத் தெரிகிறது. இன்ஷூரன்ஸ் செய்யப்படாவிட்டால், இந்த வேலைத் திட்டத்தை துவக்க விதிமுறைகளின்படி அனுமதி தரப்படக்கூடாது. அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்திருந்தால், இன்று அரசிடம் அவர்கள் நஷ்டஈடு கேட்க வேண்டிய பிரச்சினை எழாது. அப்படி இன்ஷூரன்ஸ் செய்யாமல் அந்த வேலையைத் தொடங்கியதற்காக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த வேலை 16—11—1978 அன்று முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கால நீட்டிப்பு கேட்டு, அரசாங்கத்திடமிருந்து கால நீட்டிப்பு 30-6-1980 வரையிலே பெற்றிருக்கிறார்கள். அதற்கு மத்தியிலே 24-11-1978லே சேதம் ஏற்பட்டிருக்கிறது. தற்காலிகக் கட்டுமானத்தில் மரப் பாலத்தில் இது போன்றவைகளில் எல்லாம் சேதம் ஏற்பட்ட காரணத்தினால்தான் ஒப்பந்தக்காரர்கள் அந்தப் புயலால், விதிவிலக்குக்குரிய இடையூறு, அன்எக்ஸ்பெக்டட் ரிஸ்க், ஏற்பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலே அவர்கள் நஷ்ட ஈடு கேட்டிருக்கிறார்கள். இன்ஷூரன்ஸ் செய்யப்பட வேண்டுமென்பது முக்கியமான ஒன்று. ஆனால் அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்யவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு ஏற்கெனவே இருக்கிறது என்றும், அதன்மீது அவர்கள் அரசாங்கத்திடம் கேட்ட நஷ்டஈடு கொடுக்க முடியாது என்றும் நாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. இன்னொன்று. முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டம் நிறைவேறக் காலதாமதம் ஆவது மட்டுமல்ல, திட்டப் பணிகளின் மதிப்பீட்டுத் தொகை மேலும் அதிகரிக்கக்கூடிய நிலைமையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பணிக்கு மீண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதாக அறிக்கையிலே இருக்கிறது. இப்படி மீண்டும் ஒப்பந்தம் கோரி

பிறகு செய்வதனால் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையிலே டிப்பார்ட்மெண்டல் எக்சிகியூஷன் என்ற முறையில் நெடுஞ்சாலைத் துறையே இந்தப் பணியை மேற்கொள்ள விதிமுறைகள் இருக்கின்றன அல்லது அரசு நிறுவனமான கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் மூலமாக இந்தப் பணியை முடிப்பதற்கு நமக்கு வேண்டிய விதிமுறைகள் இருக்கின்றன. எனவே டிபார்ட்மெண்டல் எக்சிகியூஷன் அல்லது கன்ஸ்டராக்ஷன் கார்ப்பரேஷன் மூலமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கெனவே மத்திய அரசினுடைய அமைச்சர் திரு. வீரேந்திரபட்டீல் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அவர்களும் சீக்கிரமாக இந்த வேலையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் பழைய ஒப்பந்தத்தை 29-12-1980 அன்று முழுமையாக ரத்து செய்து விட்டு புதிய ஒப்பந்தத்தைக் கோரியுள்ளார்கள். உடனடியாக இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(2) 1980-ல் சென்னைப் பெருநகரில் சாலை விபத்துக்கள் பெருகி மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது குறித்தும் அதைத் தடுக்கும் பொருட்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. ம. சங்கரலிங்கம்): மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-ல் சென்னைப் பெருநகரில் சாலை விபத்துக்கள் பெருகி மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது குறித்தும் அதைத் தடுக்கும் பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 78-79 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.